----

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை (''சபை'') இன் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டுமென நான் கருதும் அவதானிப்புக்களும் கருத்துரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்படுள்ளன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றினது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் *நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்* பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றித்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், பொருத்தமானவாறு அதனை வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபையின்

அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுகளின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு குழுமத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக்

காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் மீதான கணக்காய்வு அவதானிப்பு

1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் மீதான உள்ளக கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
சொத்துக்கள் வகைப்படுத்தல் மற்றும் மானியத்தின் இனங்காணல் என்பன சம்பந்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவு காரணமாக 2012 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டிலும் சொத்துக்கள் மற்றும் பெறுமானத் தேய்விற்காக முன்னைய ஆண்டு சீராக்கல்கள் செய்யப்பட்டிருந்தது. இதன் விளைவால், 2023 ஆம் ஆண்டின் மற்றும் முன்னைய ஆண்டின் ஆரம்ப நிறுத்திவைத்த உழைப்புகள் முறையே ரூபா 3,576 மில்லியன் மற்றும் ரூபா 51.93 மில்லியனால் மாற்றமடைந்திருந்தது.	முன்னைய ஆண்டு தொடர்பான சொத்து வகைப்படுத்தல் மற்றும் மானிய திரட்டல் தவறு LKAS 8 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களிவ் சீராக்கப் பட்டிருக்கவில்லை. மேலும் சொத்தக்கள் மூலதமாக்கும் நேரத்தில் சரியான சொத்தவகை மற்றும் நிதியளிப்பு மூலங்களை பரிசோதித்து இனங்காண்பதற்கு பிராந்தியங்கள் அறிவுறுத்தப்பட்டிருந்தது.	முன்னைய சீராக்கலை குறைப்பதற்கு உள்ளக கட்டுப்பாட்டை அறிமுகப்படுத்தவும் மூலதனமாக்கல் முறைமை சொத்துக்களில் சரியான பதிவேடுகளை பேணுவதற்கு வடிவமைக்கப்பட வேண்டும்.

1.5.2. இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	குறித்த நியமங்களிற்கான குறிப்புகளுடன் இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	சபையால் இன்னமும் தொடர்ச்சியாக பயன்படுத்தப்படுகின்ற ரூபா 3,990 மில்லியன் தொகையான 16 வகுதியான முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்கள் இலங்கை கணக்கீட்டு நியமம் LKAS 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டுக் காலத்தை திருத்துவதற்கு மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.	LKAS 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் நாடு முழுவதும் பரந்துள்ள பெருமளவான சொத்துக்கள் மற்றும் கணிசமான சொத்துக்கள் NWSDB மட்டுமே எனக் குறிப்பிட்டதனால் NWSDB இன் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வது நடைமுறைக்கு சாத்தியமற்றிருந்தது. எவ்வாறாயினும் நிலையான சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டக் காலம் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் ஈடுபாட்டுடன் மீளாய்வு செய்யப்டுவதுடன் அவசியமான திருத்தங்கள் இதன்படி பெறுமானத்தேய்வு வழங்குவதற்கு செய்யப்படும்.	இலங்கை கணக்கீட்டு நியமம் LKAS 16 இன் பிரகாரம் சொத்துக்கள் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டுக் காலத்தை திருத்தவதற்கு வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட வேண்டும்.
(ஆ)	கணக்கீட:டுக் கொள்கைக்கு முரணாக கழிவகற்றல் மற்றும் ஏனைய கடன்பட்டோரின் கடன் தள்ளுபடியை கணிப்பீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்ட முறைக்கு பதிலாக நிலையான வீதம் பயன்படுத்தப்பட்டது. கணக்காய்வாளருடைய கணிப்பீட்டின் பிரகாரம் கழிவகற்றல் மற்றும் ஏனைய கடன்பட்டோரின் கடன் தள்ளுபடிக்கான ஏற்பாடு அண்ணளவாக ரூபா 67.46 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.	இது வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவையின் 4.3 சதவீதத்தை பிரதிநித்துவப் படுத்துவதுடன் அந்த மீதிகளிற்காக வேண்டப்பட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டது. எனவே, எதிர்பார்க்கப்பட்டவற்றில் இந்த சுத்திகரிப்பு SLFRS 9 இல் கடன் நட்ட முறை மீதிகளிற்கு குறிப்பிடத்தக்களவு மாற்றம் செய்யப்பட வேண்டியதில்லை.	இலங்கை கணக்கீட்டு நியமம் 09 உடன் இணங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்ட முறையில் கடன்பட்டோரின் தள்ளுபடி கணப்பீடு செய்யப்பட வேண்டும்.
(இ)	SLFRS 16 – குத்தகையின் 51 ஆம் பந்தியின் பிரகாரம், வாடகை கொள்வனவு சொத்தாக வெளிப்படுத்தப்படாமல் நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புக்களில் இறையிலாதன காணிகளின் கீழ் குத்தகை ஆதன காணியாக ரூபா 669.74 மில்லியன் பெறுமதியான குத்தகையாதன சொத்துக்களாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. மேலும், சபையானது குத்தயையான காலத்தின் போது வாடகை கொள்வனவு சொத்து பயன்பாட்டிற்கான பெறுமானத்தேய்வு சாட்டுதல் செய்யப்பட்டிருந்ததுடன்	பல குத்தகை ஆதனக் காணிகளிற்காக உரிய அதிகாரிகளால் குத்தகை உடன்படிக்கைகள் எதுவும் செய்யப்படவில்லை. எனவே, SLFRS-16 (குத்தகை) இன் வேண்டுகை பிரகாரம் தற்போதைய கணக்கீட்டு சுத்திகரிப்பு தொடர்ந்திருந்தது.	உரிய இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கமைய நிதிக்கூற்றக்களில் குத்தகை இறையிலாதன சொத்துக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் உரிய பெறுமானத்தேய்வு சரியாக கணப்பீடு செய்யப்பட வேண்டும்.

	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறுமானத்தேய்வு மீதான தாக்கத்தை கணக்காய்விற்கான சான்றுகளின்மையால் மதிப்பிட முடியாதிருந்:தது.		
(ஈ)	LKAS 08 இன் பிரகரம் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்படாத சொத்துக்கள், வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள், பொருளிருப்புகள் மற்றும் மூலதன மானியங்கள் என்பன மீதான பரிமாற்றங்கள் முறையே ரூபா 216,708,371, ரூபா 5,561,212, ரூபா 67,219 மற்றும் ரூபா 630,078 என்பன 2023 ஆம் ஆண்டின் வருமான கூற்றின் மீளுரைப்பதற்கு பதிலாக உரிமை மூலதனக் கூற்றில் திரண்ட இலாபத்திற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது.	முன்னைய ஆண்டு சீராக்கலின் குழப்பம் காரணமாக மீளக்குறிப்பிடப்பட்ட செலவின வகுதியின் இனங்காணல் மிகவும் கடினமாக உள்ளது. வருமானக் கூற்றின் உண்மையான மீளாய்வை பிழையாக வகைப்படுத்தல் தவறாக வழிநடத்த முடியும். அவை முன்னைய ஆண்டு சீராக்கலாக உரிமை மூலதனக் கூற்றில் சீராக்கப்பட்டன.	நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் பொது தவறுகளை தவிர்ப்பதற்கு உள்ளக கட்டுப்பாடு முறைமை விதிக்கப்பட வேண்டும்.
(உ)	சபையானது அரச உடமையாக்கப்பட்ட தொழில் முயற்சிகளின் கூட்டு ஆளுகை மீதான வழியாட்டலின் பிரகாரம் பங்குதாரர்களிற்கு தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கலை இனங்காண்டு அந்த நடைமுறையை மீளாய்வு செய்வதற்கும் தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கலை அறிக்கையிடுவதற்கும் முறையொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்கால அறிக்கையிடல் காலத்தில் தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கலை இனங்கண்டு மீளாய்வு செய்வதற்காக சிறந்த முறையை தாபிப்தற்கு அவசியமான அளவீடுகள் அமுலாக்கப்படும்.	தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கல் இனங்காணல் முறை விருத்தி செய்யப்பட வேண்டும்.
(ஊ)	இலங்கை கணக்கீட்டு நியமம் LKAS 20 இலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக, 26 செயற்திட்டங்கள் தொடர்பில் ரூபா 7,004 மில்லியன் கூட்டுத் தொகை மற்றும் ஒரு செயற்திட்டம் தொடர்பில் ரூபா 334.53 மில்லியன் தொகையான வெளிநாட்டு மானியங்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் முறையே 16 ஆண்டுகள் மற்றும் 13 ஆண்டு காலத்திற்கு மேலாக தீர்ட்டப்படாமல் இருந்தது.	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிடமிருந்து அனுமதி பெற்ற பின்னர் 1999 இற்கு முன்னர் திரண்ட பழைய மீதிகள் சொத்து வகுதிகளின் சராசரி பயன்பாட்டு கால அடிப்படையில் திரட்டப்பட்டிருந்தன.	உரிய கணக்கீட்டு நியமத்திலுள்ள ஏற்பாடுகளிற்கமைய பெறப்பட்ட வெளிநாட்டு மானியங்கள் திரட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வெண்டும்.

1.5.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	ரூபா 929.54 மில்லியன் பெறுமதியான முப்பது நிலையங்களிலுள்ள நிலையான சொத்துக்கள் மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்ததுடன் பௌதீக ரீதியாக இருக்கவில்லை. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பதிவேடுகளின் மெய்மையாய்வின் பிரகாரம் பிரதேச ஆதார நிலையங்களில் ரூபா 291.87 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்கள் தெளிவாக இனங்காண முடியவில்லை. எவ்வாறாயினும், நிதிப் பிரமாணங்கள் 102 முதல் 105 இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், நடவடிக்கை எடுக்காமல் மீளாய்வாண்டிற்காக பெறுமானத் தேய்விற்காக ரூபா 89 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மேலும், அந்த இல்லாத சொத்துக்களிற்காக நிதிக்கூற்றுக்களில் கடன் கழிவு ஏற்பாடுகள் எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை.	சில சொத்தக்கள் உள்ளக பொருளிருப்பு மாற்ற குறிப்பு பயன்படுத்தாமல்மாற்றப்பட்டிருந்த து.சபையின் கணிப்பீட்டு சபை அறிக்கை பிரகாரம் ஏனைய சொத்தக்களின் கைதவிர்ப்பு நடைமுறையில் உள்ளது.	தவறாக பயன்படுத்தல் மற்றும் தவறவிடலை தவிர்ப்பதற்கு சொத்துக்களை முகாமை செய்வதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	செயற்திட்டங்களிற்காக பெறப்பட்ட ரூபா 29,487.70 மில்லியன் தொகையான அரசாங்க மானியங்கள், வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு மானியங்கள் நான்கு ஆண்டுகளிற்கு மேலாக தள்ளுபடி செய்யாமல் இருந்ததுடன் நிதிக் கூற்றுக்களில் திரட்டப்படாமை மீதான தாக்கம் விபரங்கள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் படாதிருந்தமையால் கணக்காய்வில் மதிப்பட முடியாதிருந்தது.	மூலதனமாக்கல் நடைமுறை பூர்த்தியான பின்னர் பூர்த்தியான செயற்திட்டம் தொடர்பான மானியங்கள் தள்ளுபடி செய்யப்படும்.	உரிய கணக்கீட்டு நியமத்திலுள்ள ஏற்பாடுகளிற்கமைய பெறப்பட்ட மானியங்களை தள்ளுபடி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் 3.2.2 ஆம் இலக்கத்தின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் பொருளிருப்பு பதிவேட்டின் மீதி நிறையிடப்பட்ட சராசரி கிரய முறையில் பெறுமதியிடப்பட வேண்டும். எவ்வாறாயினும், முகாமைத்துவ தகவல் முறைமையிடமிருந்து பெறப்பட்ட பொருளிருப்பு மீதி பெறப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட இருப்புக்களிற்கு இடையிலான அசாதாரண விலைவேறுபாடு காரணமாக நிறையிடப்பட்ட சராசரி கிரய	2021 முதல் 2023 வரையான ஆண்டுகளிற்காக மொத்த விலை முரண் ரூபா 258,090,926 இருப்புச் சீராக்கல் கணக்கு தொகையில் உள்ளடக்கப்பட்டது. இது 2025 ஆம் ஆண்டின் பொது தெளிவாக்கப்பட்டிருந்தது. இதன்படி. ரூபா 86,096,803 ஆன முரண் தொகை இருப்புச் சீராக்கல் கணக்கில் இருந்தது. இருப்பு குறைவு தொடர்பான விரிவான புலனாய்வுகள் DGM, IR மீளாய்நு செயற்பாட்டில் உள்ளதுடன் மீதிகளின் அறவீடு	அசாதாரண விலை வேறுபாடுகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	முறையுடன் இணங்கியிருக்கவில்லை என்பதுடன் ரூபா 171.99 மில்லியன் அசாதாரண விலை வேறுபாட்டுத் தொகை மீளாய்வாண்டின் போது இருப்பு சீராக்கலாக இருப்பு பெறுமதியிலிருந்து கழிக்கப்பட்டிருந்தது என கணக்காய்வு தெரிவு செவ்வையின் போது வெளிபடுத்தப்பட்டது. ஆகவே, நிதிக்கூற்றுக்களில் பொருளிருப்பு மீதிகளின் உண்மைத் தன்மையை கணக்காய்வில் மதிப்பிட முடியாதிருந்தது.	பரிந்துரைகளின் அடிப்படையில் செய்யப்படும்.	
(ஈ)	அட்டுறு வட்டி தொடர்பில் கணக்காய்வாளரால் வங்கியிடமிருந்து நேரடியாக பெறப்பட்ட உறுதிப்படுத்தல்களுடன் ஒப்பிடும் போது, ஒரு வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பில் ரூபா 694 மில்லியன் குறை ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. ஆகவே, நடைபெறும் வேலை மீதிகள் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. இதற்கு மேல் சபையானது கணக்காய்வாளர் மற்றும் வங்கிக்கு வங்கியால் உறுதிப்படுத்திய மீதியின் வித்தியாசம் காரணமாக அட்டுறு வட்டிக்காக நிதிக்கூற்றுக்களில் சபை ரூபா 166 மில்லியன் குறை ஏற்பாடு செய்திருந்தது.	உரிய வங்கிகளிலிருந்து பெறப்பட்ட வட்டி கொடுப்பனவு அறிவித்தல் பிரகாரம் அட்டுறு வட்டி வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் மீதான வட்டி செலுத்தப்பட்டது. தண்டப்பண வட்டி செலுத்தப் பட்டிருக்கவில்லை. ஆகவே, தண்டப் பணமில்லாமல் வட்டி ஏற்பாடு செய்யப்பட்டது. ஆகவே, நிதிக்கூற்றுக்களில் மேலதிக ஏற்பாடுகளொ அல்லது குறை ஏற்பாடுகளோ செய்யப்பட்டிருக்கவில்லை.	சிறந்த மதிப்பீடுகளில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.
(உ)	பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், ரூபா 20,790 மில்லியன் தொகையான எண்பத்தியொன்பது பூர்த்தியாக்கப்பட்டு மற்றும் தொடங்கப்பட்ட செயற்திட்டங்களின் கிரயம் (நிர்மாணம் மற்றும் புனரமைப்பு) மூலதனமாக்கப்படாமல் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் மூலதனமாக்கப்படாமல் நடைபெறும் வேலைகளில் இருந்தது. ஆகவே, ஆண்டிற்கான உரிய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் பெறுமானத்தேய்வு என்பன அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.	பூர்த்தியாக்கபபட்ட செயற்திட்டங்களை மூலதனமாக்குவதற்கு உரிய RSC / பிராந்தியங்கள் மற்றும் செயற் திட்டங்களுடன் இணைந்து மூலதனமாக்கல் நடைமுறையை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது	மூலதனமாக்கல் நடைமுறை நிறைவேற்றப்பட வேண்டும்.
(ஊ)	உள்ளதன்மைக்கான காரணங்களை இனங்காணாமல் நிதிக்கூற்றுக்களில் செயற்பாடற்ற சொத்துக்கள் மற்றும் செயற்பாடற்ற பொறுப்புக்கள் என்பனவாக முறையே ரூபா 149.75	கையாலான தரவு முறையிலிருந்து கணனி மயப்படுத்தப்பட்ட முறைமைக்கு மாற்றல் நடைமுறையின் பொது அந்த மூல மீதிகளின்	இருக்கின்ற மீதிகளை தெளிவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் எதிர்காலத்தில்

	மில்லியன் மற்றும் ரூபா 51 மில்லியன் தொகையான சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் நீண்டகாலம் நிலுவையாக இருக்கின்றன. மேலும், ரூபா 235 மில்லியன் இனங்காண்படாத முந்திய மீதி, ரூபா 22 மில்லியன் இருப்பு மீதி, ரூபா 8 மில்லியன் வங்கி மீதி மற்றும் ரூபா 15 மில்லியன் தொகையான அமைச்சிற்கு வழங்கப்பட்ட முற்பணம் மேற்குறிப்பிடப்பட்ட செயற்பாடற்ற சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.	பொரும்பாண்மையாகும். இருப்பினும் அந்த மீதிகளை இனங்கான பல குழுக்கள் நியமிக்கப்பட்டு மீதிகள் இணக்கம் செய்யப்பட்டது. முழு தீர்வுகளின் பாதுகாக்கப்பட்ட ஆதாரமான ஆவணங்கள் இன்மையால் அந்த மீதிகளை தெளிவாக்குவதற்கு நடவடிக்கைகள் செயற்பாட்டில் உள்ளதுடன் 2025 ஆம் ஆண்டில் தெளிவாக்கப்படும்.	தெளிவாக்கப்படாத மீதிகள் உருவாகுவதை தடுப்பதற்கு தேவையான முறைமை அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.
(எ)	ஒரு கட்டிடம், ஒரு கப் வாகனம், ஐந்து காணிகள் மற்றும் ஒரு குத்தகை ஆதனம் என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் அந்த சொத்துக்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	அந்த சொத்தக்களை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் சாத்தியமானளவு விரைவில் சொத்துப் பதிவெட்டில் உள்ளடக்கப்படும்.	உரிய நேரத்தில் கையேற்பதில் சொத்துக்களை பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஏ)	முதலீடுகள் மீதான வட்டி வருமானத்திலிருந்து ரூபா 8.47 மில்லியன் கூட்டுமொத்தமான பெறுவனவுகள் அவசர நிதியத்திற்கான ஊழியர் பங்களிப்பு மற்றும் CSR நிதியத்திற்கு சம்பள பங்களிப்பு என்பன பிரதான செயற்பாடுகளிலிருந்தான வருமானமாக தவறாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆகவே, மீளாய்வாண்டிற்கான இலாபம் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.	முதலீடுகள் மீதான வட்டி வருமான பெறுவனவுகள் அவசர நிதியத்திற்காக ஊழியர் பங்களிப்பு மற்றும் CSR நிதியத்திற்கான சம்பள பங்களிப்பு முறையே பிரதான செயற்பாடுகளிலிருந்தான வருமானமாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. நலன்புரி பாதுகாப்பு நிதியம் மற்றும் அவசர நிதிய கணக்குகள் என்பவற்றிற்கு அந்த வருமானங்கள் மாற்றப்பட்டிருந்தன. அந்த இரண்டு நிதியமும் உரிமை மூலதன ஒதுக்கமாக இனங்காணப்பட்டன அந்த நிதியத்திற்கான வருமான மாற்றுகள் நிறுத்திவைத்த இலாபத்திலிருந்து மாற்றப்பட்டதாக உரிமை மூலதன கூற்றில் சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. மேலும், சீராக்கல் ஏதாவது செய்ய வேண்டியிருப்பின் இதன்படி 2025 ஆம் ஆண்டில் சீராக்கப்படும்.	வருமான கூற்றிற்கு உரிய வருமானத்தை மாத்திரம் பதியப்பட வேண்டும்.
(ஐ)	நான்கு அண்டுகளற்கு முன்னர் வித்தியாசமான செயற் திட்டங்களிலிருந்து பெறப்பட்ட ரூபா 379.6 மில்லியன் தொகையான	உரிய தரப்பினருடன் பேரம்பேசல் நிறைவேறிய பின்னர் இந்த கணக்கு தெளிவாக்கப்படும்.	மீதிகளை உடனடியாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	ஆலோசனை கட்டணம் செலுத்த வேண்டிய ஆலோசனைக் கட்டணமாக பதியப்பட்டிருந்ததுடன் இது 2024 திசெம்பர் 31 உள்ளவாறு தீர்ப்பனவு செய்யப்பட்டோ அல்லது பதியப்பட்டோ இருக்கவில்லை.		
(ஒ)	வருடாந்த மெய்மையாய்வுகளில் சில காணிகளின் உள்ள தன்மையை மெய்மையாய்வு செய்ய இயலாதிருந்தமையால் ரூபா 86.16 மில்லியனால் சபையின் சொத்தக்களின் பெறுமதி குறைத்தக் காட்டப்பட்டிருந்தது. மேலும், சொத்துப் பதிவேட்டில் பதியப்பட்ட காணிகளிற்கும் காணிப் பதிவேட்டில் பதியப்பட்ட காணிக்கும் இடையில் 521 காணிகள் துண்டுகளின் வித்தியாசம் இனங்காணப்பட்டிருந்தது.	விபரங்கள் தேடப்படுகின்றது. சரியான காணியை இனங்கண்ட பின்னர் இந்த பெறுமதி திருத்தப்படும்.	காணியை இனங்காண்பதற்கும் சரியாக பதிவதற்கும் அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஓ)	ரூபா 170.45 மில்லியன் பெறுமதியாக சொத்துக்களின் பெறுமதி இரட்டிப்பாக காட்டப்பட்டிருந்ததுடன் அந்த சொத்துக்கள் தொடர்பில் ஆண்டின் போது சாட்டுதல் செய்யப்பட்ட பெறுமானத்தேய்வு ரூபா 4.51 மில்லியனாகும். ஆகவே, சபையின் சொத்துக்களின் பெறுமதி ரூபா 165.93 மில்லியன் ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் ரூபா 4.51 மில்லியனால் ஆண்டின் இலாபம் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.	பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதுடன் இதன்படி கணக்குகள் சீராக்கப்படும்.	சொத்துக்களின் இரட்டை பதிவுகளை தவிர்ப்பதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஔ)	இறையிலாதன கட்டிடங்கள், கட்டமைப்புகள், உட்கட்டமைப்புகள், கணனி மற்றும் ஏனைய உபகரணங்கள், அளவை உபகரணங்கள், நடமாடும் உபகரணங்கள் என்பவற்றின் ரூபா 192.18 மில்லியன் கூட்டுத் தொகை வேலை செய்யாமலும் பயன்படுத்த முடியாமலும் இருந்தன. எவ்வாறாயினும், அந்த சொத்துக்கள் தொடர்பில் ரூபா 85.08 மில்லியன் பெறுமதி பதிவழிப்பதற்கு நிதிக்கூற்றுக்களில் கடன் கழிவு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.	கணிப்பீட்டு சபை அறிக்கையின் பரிந்துரைகளில் அவசியமான நடவடிக்கை எடுக்கப்படும்.	கணிப்பீட்டு சபை அறிக்கை பரிந்துரைகளின் பிரகாரம் அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(க)	நான்கு நீர் வழங்கல் செயற்திட்டங்களிறகாக பெறப்பட்ட கடன் தொடர்பில் தவணைப்பண மீள் செலுத்தல்கள் மற்றும் வட்டி என்பவற்றின் தாமதம் காரணமாக	தமதத வட்டி பின்வரும் காரணங்களால் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	கணக்கீட்டு காலப்பகுதி தொடர்பான சகல பெறுப்புக்களும் நிதிக் கூற்றில் பதியப்பட வேண்டும்.

	தண்ட வட்டியாக ஏற்பட்ட ரூபா 347 மில்லியனிற்கு சமமான தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகவே, மீளாய்வாண்டிற்கான நடைபெறும் வேலைகள் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.	HNB – HNB ஆனது வட்டியை கொரியிருக்கவில்லை.	
(கா)	வியாபார கடன்பட்டோரில் ரூபா 290 மில்லியன் தொகை மற்றும் கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்குகளில் ரூபா 4,779 மில்லயன் தொகை என்பன கடன் தள்ளுபடி கணிப்பீடுகளில் கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆகவே சரியாக தள்ளுபடி மதிப்பிடப்பட முடியாதிருந்தது.	தள்ளுபடி கணிப்பீடு வர்த்தக பிரிவால் வழங்கப்பட்ட உள்ளபடியான தொகையின் அடிப்படையில் இருந்தது. வர்த்தகப் பரிவு மற்றும் பொதுப் பேரேட்டு முறைமை தனித்துவமான நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நிறுவப்பட்டுள்ளது. எனவே, அந்த இரண்டு முறைமைகளிற்கும் இடையில் வித்தியாசம் உள்ளது.	சகல கடன்பட்டோர் மீதிகளும் தள்ளுபடி கணிப்பீடு செய்யும் பொது கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.
(கி)	நடைபெறும் வேலைகளில் உள்ளடக்கப்பட்ட பதினைந்து ஆண்டுகளிற்கு மேல் நகராதிருந்த ஐந்து (05) செயற்திட்டங்கள் தொடர்பில் ரூபா 198.72 மில்லியன் கூட்டுத் தொகையான மீதிகள் மீதான தள்ளுபடி தாக்கத்தை இனங்காண்பதற்கு கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கவில்லை.	அந்த செயற்திட்டங்கள் இன்னமும் நடைமுறையில் உள்ளதுடன் கணக்காளர்கள் பூர்த்தியாக்கப்பட்ட செயற்திட்டங்களை மூலதனமாக்குதற்கும் உரிய செயற்திட்டங்களின் கீழ் பயன்படுத்தக் கூடிய சொத்துக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளது.	பயன்படுத்தாத சொத்துக்களிற்காக தள்ளுபடி மேற்கொள்ளப்பட வேண்டும்.
(கீ)	HDFC இல் முதலீடு செய்யப்பட்ட பங்குகள் தொடர்பில் ரூபா 5.8 மில்லியன் மீள மதிப்பிடப்பட்ட தொகை முதலீட்டு தன்மை நீண்ட காலமாக இருந்தும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலமைக் கூற்றில் குறுகிய கால முதலீடுகளாக காட்டப்பட்டிருந்ததது. ஆகவே, நடைமுறைச் சொத்துக்கள் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும் உத்தியோகத்தர் கடன்களிற்கான HDFC முதலீடுகள் கருதப்பட்ட ரூபா 434,368 ஆன தொகையின் உள்ள தன்மை தகவல்கள் இன்மையால் மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது. எவ்வாறாயினும், மத்திய வைப்பக முறைமையில் இருந்தான உறுதிப்படுத்தல் பெறப்பட்டிருக்காததுடன் கம்பனி செயலாளரிடமிருந்தான உறுதிப்படுத்தல் மாத்திரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைத்த மீதிகளை	உத்தியோகத்தர் கடன்களிற்கான HDFC முதலீடுகள் மீது பங்குதாரர் பொறுப்புடையதாக இருக்கவில்லை. கடன் முழு அறவீட்டின் மீது NWSDB இற்கு HDFC ஆல் மீளளிப்பு செய்யப்பட வேண்டியிருருந்தது.	முதலீடுகளின் தன்மையை இனங்காண்பதற்கும் இதன்படி சமர்ப்பிப்தற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் முதலீட்டுத் தொக உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

உறுதிப்படுத்தியிருந்தது.

(கு)	UDA செயற்திட்டம் ADB ஆக காட்டப்பட்ட ரூபா 20.71 மில்லியன் தொகைக்கான சான்றுகள் கிடைத்திருக்கவில்லை. ஆகவே நாங்கள் இந்த உள்ளதன்மையை மெய்மையாய்வு வெய்வதற்கு இயலாதிருந்தது.	UDA இடமிருந்து தெளிவுபடுத்தல்கள் பெற்ற பன்னர் அவசியமான நடவடிக்கை எடுக்கப்படும்.	பொறுப்புக்களின் உள்ள தன்மையை இனங்காண்பதற்கும் இதன்படி சீராக்கல் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(கூ)	கொழும்பு பெருமபாக கழிவுநீர் முகாமைத்துவ செயற்திட்டத்திற்கான கடன் இல. 3348 இன் கீழ் அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட ரூபா 11,011.54 மில்லியன் துணைநிலைக கடன் துணைநிலைக் கடனாக பயன்பாட்டளர்கள் புரிந்து கொள்வதற்காக முறைப்படி வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிக்கும் மற்றும் இந்த கடன் தொடர்பில் அரசாங்க கடனில் காட்டப்பட்ட மீதிக்கும் இடையில் ரூபா 6,568 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. மேலும் யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் செயற்திட்டத்திற்காக (கடன் இல. 3603 மற்றும் 3604) பெறப்பட்ட ரூபா 5,626 மில்லியன் கடன் துணைநிலை கடன் உடன்படிக்கை உள்ள போதும் துணைநிலை கடனாக காட்டுவதற்கு பதிலாக திறைசேரி தீர்ப்னவு செய்யப்பட்ட உரிமை மூலதனத்திற்கு மாற்றக்கூடிய கடன்களாக வகுதிப்படுத்தப்பட்டிருந்தது.	இது அரசாங்கத்தால் பெறப்பட்ட கடனாக உள்ளதுடன் நாட்டின் அரசாங்க கணக்குகளில் பதியப்பட்டதுடன் அவை வெளிநாட்டு மானியங்களில் கொடுக்கல் வாங்கல் அடிப்படையில் NWSDB இல் மானியமாக கணக்கீடு செய்யப்பட்டன.	கடன் பொறுப்பின் தன்மையாக கடனை வகைப்படுத்தப்பட வேண்டும்.
(கெ)	நீர் வழங்கல் செயற்திட்டங்களிற்காக பொது திறைசெரி கடன்படலின் ரூபா 26,511 மில்லியன் தொகை திறைசேரி தீர்ப்னவு செய்யப்பட்ட உரிமை மூலதனத்திற்கு மாற்றக்கூடியவற்றின் கீழ் செலுத்த வேண்டிய கடனாக பதியப்பட்டிருந்தது. ஆகவே, கடன் மீதி ரூபா 26,511 மில்லியனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.	2025 ஆண்டு நிதிக்கூற்றுக்களில் அவசியமான திருத்தங்கள் செய்யப்படும்.	பெறப்பட்ட தன்மையாக கடனை வகைப்படுத்தப்பட வேண்டும்.
(கே)	காசு மற்றும் காசிற்கு சமமானவை தலைமை அலுவலகத்தால் வழங்கப்பட்ட காசுக் கட்டுநிதியில் செயற்திட்டத்தால் செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் பதியப்படாமை காரணமாக ரூபா 2,352 மில்லியனால் அதிகரித்துக்	கட்டுநிதி மீதிகள் தீர்ப்பனவு செய்யப்படும் 2025 ஆம் ஆண்டின் பொது உரிய செயற்திட்டங்களால் நாட்குறிப்பு பதிவேடுகள் சமர்ப்பிக்கப்படும்	காசு கட்டுநிதி ஊடாக செய்யப்பட்ட கொடுக்கல் வர்கல்கள் குறித்த காலப் பகுதிக்குள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும்.

	காட்டப்பட்டிருந்தது.		
(கை)	செலுத்தப்பட்ட வட்டி வருமானக் கூற்றில் சாட்டுதல் செய்வதற்கு பதிலாக GCWWMIIP செயற்திட்டம் 1 பூர்த்தியாக்கப்பட்ட செயற்திட்டம் தொடர்பில் வட்டியை மூலதனமாக்கிமையால் ரூபா 63.13 மில்லியனால் நடைபெறும் வேலை மற்றும் ஆண்டிற்கான இலாபம் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.	செயற்திட்டமானது இன்னமும் நடைமுறை வேலையில் உள்ளது. ஆகவே, செலுத்தப்பட்ட வட்டி இதன்படி சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது.	செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருப்பின் செலுத்தப்பட்ட வட்டி வருமானக் கூற்றில் சாட்டுதல் செய்யப்பட வேண்டும்.
(கொ)	சபையானது கொள்கை கட்டமைப்பின் பந்தி 4.15 ஆம் பந்தயின் பிரகாரம் மாத்தறை கட்டம் IV செயற்திட்டம் தொடர்பில் ரூபா 1,208 மில்லியன் இடைக்கால செலுத்த வேண்டியவைககான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டிய போதிலும் நிகழத்தக்க பொறுப்பாக குறிப்பு இல. 36 இல் வெளிப்படுத்தல் மாத்திரம் செய்யப்பட்டிருந்தது. ஆகவே, இலாபம் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.	சபையால் எடுக்கப்பட்ட தீர்மானத்தில் பிரகாரம் அரசாங்கத்தால் பொறுப்பின் தீர்ப்பனவிற்காக அமைச்சரவை அறுமதி பெறப்படுவதற்காக நடவடிக்கை தொடங்கப்பட்டிருந்தது. அமைச்சரவை தாளின் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு 2025 ஆண்டில் நிதிக்கூற்றில் அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	இலாபம் சீராக்கப்பட வேண்டும்.
(கோ)	2023 ஆம் ஆண்டு தொடர்பில் ரூபா 498.47 மில்லியன் காப்பீட்டு மதிப்பீட்டு நட்டம் நடைமுறை ஆண்டு விரிவான வருமானக் கூற்றில் சீராக்கப்பட்டிருந்தது. ஆகவே ஆண்டிற்கான விரிவான வருமானம் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும், விரிவான வருமானம் மற்றும் பெறவேண்டியவை காப்பீட்டு மதிப்பீட்டில் செலுத்தப்பட்ட பணிக்கொடையை கருத்திற் கொள்ளாமல் ரூபா 16.5 மில்லியனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.	காப்பீட்டு மதிப்பீடு சுதந்திர வெளித்தரப்பு நிபுணரால் நடாத்தப்பட்டிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களிற்காக சகல தொடர்புபட்ட சீராக்கல்கள் நிபுணத்துவருடைய பரிந்துரைகள் அடிப்படையில் செய்யப்பட்டது. இதன்படி காப்பீட்டு நட்டத்தின் சுத்திகரிப்பு மதிப்பீட்டு அறிக்கையில் செய்யப்பட்ட வழிகாட்டலில் இருந்தது.	உரிய காலப்பகுதி செலவினங்களை முறையாக பதியப்பட வேண்டியதுடன் இதன்படி கணக்ககள் திருத்தப்பட வேண்டும்.
(கௌ)	சபையானது 2024 ஆம் ஆண்டில் மீள்சழற்சி வேலைகளிலிருந்தான இலாபமாக கருதுவதற்கு பதிலாக ஏனைய செயற்பாட்டு வருமானம் மற்றும் இலாபமாக வருமானக் கூற்றில் வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்ட மீள்சுழற்சி வேலைகளிற்கான முற்பணம் ரூபா 9.164 மில்லியன் சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. அந்த மீள்சுழற்சி வேலைகள் தொடர்பான செலவினம் சபையால் பொருத்தமான	மீள்சுழற்சி செயற் திட்டங்களிற்காக பொறி முறையை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை செயற்பாட்டில் உள்ளன.	உரிய காலப்பகுதி வருமானம் அனுமதிக்கப்பட வேண்டும்.

	கொள்கையை பிரயோகிக்காமல் வருமானக் கூற்றில் முன்னைய ஆண்டு வருமானத்திற்கு பதியப்பட்டிருந்தது.		
(சா)	கேகாலை வடிவமைப்பு பிரிவின் களஞ்சியத்தில் ரூபா 19 மில்லியன் பெறுமதியான நட்டங்களிற்கான ஏற்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகவே, நடைபெறும் வேலை மீதிகள் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.	களஞ்சிய இருப்பு குறைவுகள் தொடர்பில் விரிவான விசாரணைகள் பரிந்துரைகளின் அடிப்படையில் நடைபெறுகின்றதுடன் மீதிகள் அறவீடு செய்யப்படும்.	தேவைப்பட்ட திருத்தங்கள் விசாரணைகளின் அடிப்படையில் செய்யப்பட வேண்டியதுடன் நட்டங்கள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும்.
(சி)	தீர்ப்பனவு செய்யப்படாதிருந்த வியாபார மற்றும் பெறவேண்டிய மீதிகளில் உள்ளடக்கப்பட்ட ரூபா 35.23 மில்லியன் தொகையான உள்ளக பிராந்திய நடைமுறைக் கணக்குகள் இணக்கம் செய்யப்படாதிருந்தது. ஆகவே, வியாபார மற்றும் பெறவேண்டிய மீதிகள் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.	கருத்துரைகள் பெறப்பட்டிருக்கவில்லை.	நடைமுறைக் கணக்குகள் காலரீதியான அடிப்படையில் இணக்கம் செய்யப்பட வேண்டியதுடன் இதன்படி கணக்குகளில் அவசியமான சீராக்கல் செய்யப்பட வேண்டும்.

1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது பதிவேடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	ஏயுவு அறிக்கைகள் மற்றும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீட்டர் விற்பனை பெறுமதி, மொத்த விற்பனைகள், பவுசர் நீர் வழங்கல் மற்றும் பிரதான செயற்பாடுகளிலிருந்தான வருமானம் என்பவற்றிற்கு இடையில் ரூபா 1,264 மில்லியன் வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டது.	வகைப்படுத்தல் வித்தியாசம், வருமான இனங்காணல் வித்தியாசம் மற்றும வெளி செயற்படுத்தல் இடைவெளி (கால வித்தியாசம்) போன்ற பல்வேறு காரணங்களால் வித்தியாசங்கள் ஏற்பட்டன. சில வருமான வகுதிகான VAT சாட்டுதல் செய்யப்படவில்லை.	நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது வித்தியாசங்களை இனங்காணப்பட்டு இணக்கம் செய்யப்பட வேண்டும்.
(ஆ)	சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதியை உரிய செயற்திட்டங்களின் தனிப்பட்ட நிதிக்கூற்றுக்களுடன் ஒப்பீடும் போது ஒரு வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கின் வெளிநாட்டு மூலதன மானியங்களில் ரூபா 385 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.	வித்தியாசங்கள் ரூபா 8,865,521,372.15 இலிருந்து ரூபா 1,478,646,399.59 இற்கு வந்திருந்தது.	வித்தியாசங்களை இனங்காணப்பட்டு இணக்கம் செய்யப்பட வேண்டியதுடன் ஏதாவது இருக்குமாயின் சீராக்கல் செய்யப்பட வேண்டும்.
(இ)	சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிக்கும் மூன்று வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட நேரொத்த செயற்திட்டங்களின்	அந்த வித்தியாசங்கள் இனங் காணப்பட்டிருந்தது.	வித்தியாசங்களிற்கான காரணங்களை இனங்காண்பதற்கு முறையாக இணக்கம்

	தனிப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிக்கும் இடையில் ரூபா 658 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.		செய்யப்பட வேண்டியதுடன ஏதாவது இருக்குமாயின் சீராக்கல் செய்யப்பட வேண்டும்.
(ஈ)	சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிக்கும் மூலதன பங்களிப்பு தொடர்பில் பொது திறைசேரியின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிக்கும் இடையில் ரூபா 15,192 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.	2014 இல் உரிமை மூலதமாக மாற்றப்பட்டிருந்த கடன்களின் கைதவிர்ப்பு NWSDB இன் நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக அரசாங்க உரிமை மூலதனமாக காட்டப்பட்டிருந்தது. எனவே, மூலதன பங்களிப்பில் நிதிக்கூற்று மற்றும் பொது திறைசேரியில் காட்டப்பட்டவற்றிற்கு வித்தியாசம் உள்ளது.	வித்தியாசங்கள் இனங்காணப்பட வேண்டியதுடன் இதன்ப பதிவுகள் செய்யப்பட வேண்டும்.
(உ)	நிதிக்கூற்றில் காட்டப்பட்ட கடன்பட்டோர் மீதிக்கும் வர்த்தக செயற்பாடுகள் முகாமைத்துவ முறைமைக்கும் இடையில் ரூபா 4,648.88 மில்லியன் இணக்கம் செய்யப்படாத வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டது. மேலும், 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்பட்டோர் சேகரிப்பு கணக்கில் ரூபா 4,779 மில்லியன் தொகை தெளிவாக்காமல் இருந்தது.	வர்த்தக முறைமை மற்றும் பொதுப்பேரேட்டு முறைமை நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு கட்டமைக்கப்பட்டன. எனவே, இரண்டு முறைமைக்கும் வித்தியாசம் உள்ளது.	வித்தியாசங்கள் இனங்காணப்பட வேண்டியதுடன் இதன்ப பதிவுகள் செய்யப்பட வேண்டும்.

1.5.5 கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்காத ஆவணரீதியான சான்றுகள்

	விடயம்	தொகை ரூபா மில்லியன்	கிடைக்கப்பெறாத சான்றுகள்	முகாமைத்துவ கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	ஏனைய கடன்பட்டோர்	77.99	விரிவான பட்டியல் (217 மற்றும் 219)	எதிர்காலத்தில் அந்த மீதிகள் தீர்க்கப்பட வேண்டியிருந்தது.	சான்றிற்கான விபரங்கள் சமர்ப்பிப்தற்கு தேவையான ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும்.
(ஆ)	பிடித்துவைத்தல் வரி – 2024	30.27	பிடித்துவைத்தல் வரிச் சான்றிதழ்	சமர்ப்பிக்கப்பட்டது	
(இ)	திறைசேரி மானியங்கள் (363) மூலதன மானியங்கள் - உள்ளூராட்சி அதிகாரசபை (364) வெளிநாட்டு மானியங்கள் (365)	146,651 1,409.92 8,611.82	ஒவ்வொரு செயற்திட்டம் தொடர்பான விபரங்கள்	பதிலளிக்கப்படவில்லை	
(ஈ)	வங்கி மீதிகள் (52 வங்கி கணக்குகள்)	925	ஒவ்வொரு மீதிக்குமான வங்கி	வங்கி மீதி உறுதிப்படுத்தல் வேண்டுகை	

		உறுதிப்படுத்தல்	கடிதங்கள் ஏற்கனவே உரிய வங்கிக்ககு அனுப்பபட்டிருந்தது.

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டியவைகள்

1.6.1. பெறவேண்டியவைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	ரூபா 4,409 மில்லியன் கூட்டுதொகையான வியாபார கடன்பட்டோர், புதிய இணைப்பு கடன்பட்டோர், கழிவகற்றல் கடன்பட்டோர், துண்டிக்கப்பட்ட கடன்பட்டோர் மற்றும் ஏனைய கடன்பட்டோர் ஒரு ஆண்டிற்கு மேலாக அறவிடப்படாமல் இருந்தது. ரூபா 440 மில்லியன் பாடசாலை வகுதி மற்றும் துண்டிக்கப்பட்டடாரிடமிருந்து பெறவெண்டியதாக இருந்தது. மொத்த நிலுவையாக இருக்கின்ற ரூபா 1,995 மில்லியன் கூட்டுத் தொகையான வியாபார கட்ன்பட்டோரில் மேற்குறித்த வியாபார கடன்பட்டோர் ஒரு ஆண்டிற்கு மேலாக அறவிடப்படாமல் இருந்தது. 12/2015 ஆம் இலக்க சபை சுற்றறிக்கை பிரகாரம், துண்டிக்கப்பட்ட நாளிலிரந்து 3 மாதங்கள் வரையும் துணடிக்கப்பட்ட கடன்பட்டோரல் ரூபா 922 மில்லியன் கடன் தொகைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப ்பட்டிருக்கவில்லை. புதிய இணைப்பு கடன்பட்டோர் 3 தவணைகளில் அறவிடப்பட வேண்டிய போதிலும், ரூபா 27.84 மில்லியன் தொகை ஒரு ஆண்டிற்கு மேல் அறவிடப்படாமல் இருந்தது. பாராளுமன்ற அரசாங்க விடுதிகளிற்கு வழங்கப்பட்ட 06 இணைப்புகள் தொடர்பில் ரூபா 1.8 மில்லியன் மேற்குறிப்பிட்ட மீதியில் மீளாய்வாண்டு இறுதியில் அறவிடப்படாமல் நிண்டகாலம் நிலுவையாக இருந்தது.	இருக்கின்ற சட்டங்கள் மற்றும் பிரமாணங்களிற்கு உட்பட்டு சட்டரீதியாக நீண்டகாலம் நிலுவையாக இருக்கின்ற மீதிகளை அறவிடுவதற்கு தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. எவ்வாறாயினும் கடன்பட்டோர் அறவீட்டின் பொது சில நடைமுறைப் பிரச்சனைகள் எழுந்திருந்தன.	உள்ளக சுற்றறிக்கை பிரகாரம் நிலுவையாக இருக்கின்ற தொகையை அறவிடுவதற்கு தேவையான நடவடிகடகை எடுககப்படுவதுடன் அந்த மீதிகளை அறவிடுவதற்கு இருக்கின்ற நடைமுறைகளை பின்பற்றியிருக்காத ஊழியர்களிற்கு எதிராக நடவடிககை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	முன்னாள் செயற்பாடற்ற ஊழியர்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 16.9 மில்லியன் தொகைான கடன்கள் மற்றும் முற்பணங்ள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடுவதற்கு முறையான	HRM மற்றும் நிதிப் பிரிவின் மீதிகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன.	உரிய தரப்பினரிடமருந்து நிலுவை தொகையை அறவிடுவதற்கு அவசியமான நடவடிக்கை

	நடவடிக்கை எடுக்காமல் 13 ஆண்டுகளிற்கு மேலாக கணக்குகளில் இருந்தது. எவ்வாறாயினும், கணக்காய்வு தெரிவு செவ்வையின் பிரகாரம், கடன்களை பெற்றிருந்த மேற்குறித்த ஊழியர்கள் கடன்களின் 90 சதவீதத்திற்கும் அதிகமானவை பெறவேண்டிய தொகைகளை அறவிடாமல் ஓய்வில் சென்றிருந்தனர்.		எடுக்கப்பட வேண்டும்.
(இ)	வெளி நிறுவனங்களில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 75 மில்லியன் கூட்டுத் தொகையான மீளளிக்க வேண்டிய குறுகியகால வைப்புகள் மூன்று ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாமல் நிலுவையாக இருந்ததுடன் அவற்றில் ரூபா 11.95 மில்லியன் தொகை உரிய ஆவணங்கள் இன்மையால் அறவிட முடியாதிருந்தது. மேலும், உரிய அமைச்சிற்கு வழங்கப்பட்ட ரூபா 4.37 மில்லியன் தொகையான முற்பணம் பதினொரு ஆண்டுகளிற்கு மேல் அறவிடப்படாமல் நிலுவையாக இருந்தன. எவ்வாறாயினும், முற்பணங்களின் அறவீட்டுத் தன்மை ஐயத்திற்கிடமாகவுள்ளதுடன் மீளாய்வாண்டிற்காக வரிசை அமைச்சின் பொறுப்புகள் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை.	அந்த சில தொகைகள் மீளளிக்கவேண்டிய வைப்பாக 2017 பெப்ரவரி மாதத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்தப்பட்டிருந்தது. இந்த வைப்பினை அறவிடும் நோக்கில் RDA ஆனது 2022 ஆம் அண்டில் அறிவிக்கப்பட்டது. ஆனால் இதுவரை தீர்ப்பனவு செய்யப்படவில்லை. ஆகவே, எதிர்காலத்தில் RDA இற்கான இந்த கொடுப்பனவுகளை அறவிடுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டன.	வைப்புக்கள் மற்றும் முற்பணங்களின் உள்ளதன்மை மற்றும் மீளாய்வு செய்வதற்கு உடனடியாக நடவடிகைக எடுக்க்பபட வேண்டியதுடன் அறவீட்டு நடைமுறையை நிறைவேற்றப்பட வேண்டும்.

1.6.2 முற்பணங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	பேரேட்டு தலைப்பு இல. 246/0 இன் கீழ் வழங்கப்பட்ட ஒப்பந்த முற்பணங்களின் ரூபா 1,710 மில்லியனில் ரூபா 364.71 மில்லியன் தொகை மூன்று ஆண்டுகளிற்கு மேலாக தீர்க்கப்படாமல் இருந்தது. அந்த முற்பணங்களின் அறவீட்டுத் தன்மை அடையாளம் காணப்பட்ட ரூபா 9.8 மில்லியன் பெறுமதிக்காக தொடரப்பட்ட ஆறு சட்ட வழக்குகள் பற்றி கணக்காய்விற்கு எவ்வித சான்றுகளையும் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், நான்கு ஒப்பந்தகாரர்களிற்கு	நிதித் தட்டுப்பாடு காரணமாக சொல்லப்பட்ட செற்திட்டங்களின் முன்னேற்றம் மெதுவாக இருந்ததுடன் IPC இன்னமும் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே ஒப்பந்த முற்பணங்கள் இன்னமும் அறவிடப்படாமல் இருந்தது.	முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிகை எடுக்கபபட வேண்டியதுடன் பொறுப்புடைய உத்தியோகத்தர்கள் கவனயீனத்தால் ஏதாவது நட்டங்கள் ஏற்பட்டிருப்பின் அரசாங்கத்திற்கு சுமத்தப்பட்டிருக்கவில்லை

	வழங்கப்பட்ட ரூபா 31 மில்லியன் தொகை செயலாற்றல் பிணை முறியின்மையால் அறவிட முடியாதிருந்ததுடன் அந்த நிலுவைகளை தீர்ப்பதற்கு சபையால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. .		
(ஆ)	பிராந்திய சேவை நிலையம்- மத்தி பிரதேச செயலகங்களிற்கு 5 ஆண்டுகளிற்கு முன்னர் செலுத்தப்பட்டிருந்த போதிலும் செலுத்தப்பட்ட ரூபா 76 மில்லியன் காணி முற்பணத் தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை பெறப்பட்டிருக்கவில்லை. RSC ஆனது ரூபா 72.27 மில்லியன் பெறுமதிக்காக வேண்டப்பட்ட தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டங்கள் பூர்த்தியாக்குவதற்காக வழங்கப்பட்ட முற்பணங்கள் மாற்றப்படாமையால் ரூபா 3.8 மில்லியனால் சொத்துக்கள் பெறுமதி குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. பிரதேச செயலகங்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 41.15 மில்லியன் 246 ஆம் இலக்க பாதீட்டு தலைப்பின் கீழ் ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்ட முற்பணமாக பதியப்பட்டிருந்ததுடன் 10 ஆண்டுகளிற்கு மேலாக தெளிவாக்கப்படாமல் இருந்தது. அவற்றில் ரூபுா 6.9 மில்லியன் தொகை மூலதனமாக்கப்படாமல் ஒப்பந்தகாரருடைய முற்பணக் கணக்கில் இருந்தது.	இந்த தொகை கண்டி பெரும்பாக WSP செயற்திட்டததிற்கு செலுத்தப்பட்ட முற்பணங்களை கொண்டிருந்ததுடன் மொத்த தொகையும் RSC (மத்தி) இற்கு மாற்றப்பட்டிருந்தது. வழங்கப்பட்ட தொகை மூலம் மேவப்பட்ட காணிகளின் விபரங்கள் தற்போது இனங்காணப்பட்டிருந்ததுடன் காணி சுவீகரிப்பு காணிகளின் நிலைமை நாளது வரையாக்கப்படுகின்றன.	முற்பணங்கள்இதீர்ப்பனவு செய்யப்பட வேண்டியதுடன் கணக்காய்வாளரால் வேண்டப்பட்ட தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வெண்டும். உரிய கணக்குகள் திருத்தப்பட வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை

சட்டங்கள, விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள்			
(i) பிரிவு 104	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பின்வரும் நட்டங்கள் தொடர்பில் நிதிப்பிரமாணங்களிற்கு அமைய எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.		
	(i) மிரிஜ்சிவெல ஏற்றுமதி	பதிலளிக்கப்படவில்லை	அந்த

செயற்படுத்தல் வலயத்திற்கு நீர் வழங்கியதற்காக 2014 திசெம்பர் முதல் 2024 செப்தெம்பர் வரை காலத்தின் போது தவறான குறியீடின் கீழ் இரண்டு இணைப்புக்களை பட்டியலிட்டதன் காரணமாக ரூபா 3.9 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது.		நட்டங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ii) அரசாங்க சுற்றறிக்கைக்கு முரணாக 2021 ஆகஸ்ட் மாதத்திலிரற்து 2024 மே வரையான காலத்தின் போது பொது முகாமயாளரின் அனுமதியில் மாத்தரம் முன்னாள் தலைவரின் தனிப்பட்ட வளவிற்கு பாதுகாப்பு சேவை வழங்குவதற்காக ரூபா 5.8 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது.	சபையின் முன்னாய் தலைவரின் வாய்மூல அறிவுறுத்தலின் படி சபை செயலாளர் அவருடைய அலுவலகம் மற்றும் தனிப்பட்ட வதிவிடத்திற்கு இரண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்களை வழங்குவதற்கு 2021.08.04 ஆந் திகதிய கடிதத்தில் பொது முகாமையாளரின் அனுமதியுடன் பாதுகாப்பு அத்தியட்சகருக்கு அறிவிக்கப்பட்டது. இதன்ப பாதுகாப்பு அட்தியட்சகர் இரண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. முன்னாள் தலைவரின் அலுவலகத்தின் குழு காலாவதியான பின்னர் 2024 செப்தெம்பர் மாதத்திலிரந்து சொல்லப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்களும் அகற்றப்பட்டிருந்தது.	மதிப்பிடப்பட்ட தொகை தொடர்பில் பொது திறைசேரிக்கு அறிக்கையிடப்பட வேண்டும்.
(iii) சபையானது பொது முகாமையாளருக்கு ஒதுக்கப்பட்ட வாகனத்திற்கு 2023	காப்புறுதி கூட்டுத்தாபனத்துடன் பேச்சுவார்த்தை நடாத்திய பின்னர் 50 சதவீத முற்பண	காப்புறுதி கம்பனியிடமிருந்து மிகுதியை அறவிடுவதற்கு உடனடியாக

	ஏப்ரல் 12 இல் விபத்து நிகழ்ந்திருந்த போதும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதான கணககீட்டு உத்தியோகத்தர், பொது திறைசேரியின் வாகன விபத்தக்களில் ரூபா 13 மில்லியன் மதிப்பிடப்பட்ட நட்டம் பதிவு செய்திருந்தது	கொடுப்பனவு (ரூபா 2,999,975) பெறப்பட்டது. மிகுதி திருத்தங்கள் பூத்தியாக்கி கையளிக்கப்பட்ட பின்னர் செலுத்தப்பட வேண்டும்.	நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ) பிரிவு 571	ரூபா 195.08 மில்லியன் தொகையான மீளளிக்க வேண்டிய கேள்வி வைப்புகள் உரிய தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டோ அல்லது வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டோ இருக்காமல் இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக இருந்தது.	மீளளிக்க வேண்டிய கேள்வி வைப்பக்கள் உரிய தரப்பினரிடமிருந்து ஏழுத்து மூல வேண்டுகை சமர்ப்பித்தலில் விடுவிக்கப்படுகின்றன. இது கோரப்படும் வரை செய்யப்படாமல் இருந்தது.	கேள்வியாளரிற்கு அறிவிப்பதற்கும் வைப்பக்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இருக்கின்ற தீர்க்கப்படாத மீதிகள் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும்.
(இ) 2021 நவம்பர் 16 ஆந் திகதிய பொது முயற்சிகள் திணைக்களத்தின் அரச உமையாக்கப்பட்ட முயற்சிகளின் செயற்பாட்டுக் கைநூலின்			
(i) 5.1 ஆம் பந்தி	இந்த ஏற்பாட்டிற்கு முரணாக, திரண்ட நிதியத்திற்கு இலாபம் பகிரப்படாமல் சபையின் அனுமதியின் கீழ் 2023 ஆம் ஆண்டிற்கான மிகையூதியத்திற்கு பதிலாக உற்பத்தி ஊக்குவிப்பாக ரூபா 286.76 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. இதற்கு மேல், மீளாய்வாண்டின் போது சம்பளங்களுடன் மாதாந்த உற்பத்திப் படியாக ஊழியர்களிற்கு ரூபா 444.60 மில்லியன் தொகை செலுத்தப்	உற்பத்தி வருமானம் அதிகரிப்பின் படி உற்பத்தி ஊக்குவிப்பு செலுத்தப்பட்டது. இது உற்பத்தி நியம வருமானம், சேகரிப்பு றேுசு பொன்றன உள்ளடக்குகின்ற சூத்திரத்தின்படி கணிப்பீடு செய்யப்பட்டது. மிகையூதியம் உழைத்த இலாபம் மற்றும் அரசாங்கம் வழங்கிய சுற்றறிக்கை என்பவற்றின் படி மாத்திரம் செலுத்தப்பட்டது. இதன்படி மியூைதியம்	செயற்பாட்டுக் கைநூலிற்கு முரணாக செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் அறவிடப்பட வேண்டும்.

		பட்டிருந்தது.	செலுத்தப்படவில்ல.	
	(ii) 6.2 ஆம் பந்தி	2024 ஆம் ஆண்டில் முதலீட்டு குழு தாபிக்கப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் போது முதலீட்டு தீரமானம் எடுக்கும் பொது வினைத்திறனான செயற்பட்டிருக்கவில்லை.	முதலீட்டு குழு தாபிக்கப்படும் பொது குறிப்புரை நிபந்தனை (TOR) உள்ளதுடன் TOR ஐ பின்பற்றி உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.	முதலீட்டு குழு செயற்பட வேண்டும்.
(ஈ)	2021 நவம்பர் 16 இன் அரசுடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்கான கூட்டு ஆளுகை மீதான வழிகாட்டலின்			
	(i) 2.3 ஆம் பந்தி	2025-2029 வரையான காலத்திற்காக கூட்டிணைந்த திட்டம் 2025 ஏப்ரல் வரை பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை	கூட்டிணைந்த திட்டம் இறுதி கட்டத்தில் உள்ளதுடன் இது இறுதியாக்கப்படுமாயின் சமர்ப்பிக்கப்படும்.	கூட்டிணைந்த திட்டம் உடனடியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
	(ii) 4.3 ஆம் பந்தி	வழிகாட்டலின் பிரகாரம் தாபிக்கப்பட்ட ஆபத்துக் குழு மீளாய்வாண்டின் போது செயற்பட்டிருக்கவில்லை.	குழு 2025 ஆம் அண்டில் அதன் செயற்பாடுகளை தொடஙகயிருந்தது. இதன்படி குழுக் கூட்டம் 2025.05.15 இல் நடைபெற்றது.	சபையால் முகம்கொத்த ஆபத்தை குறைப்பதற்கு குழுக் கூட்ட தீர்மானம் அமுலாக்கப்பட வேண்டும்.
(உ)	2020 சனவரி 27 ஆந் திகதிய PED 01/2020 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 1.2 ஆம் பந்தி	சுற்றறிகை ஏற்பாடுகளிகு முரணாக தலைவரால் மூன்று வாகனங்களும் உப தலைவரால் இரண்டு வாகனங்களும் 2022 ஆம் ஆண்டு முதல் 2024 செப்தெம்பர் வரை பயன்படுத்தப்பட்டோ அல்லது ஒதுக்கப்பட்டிருந்தது. தலைவரால் பயன்படுத்திய வாகனங்கள் 2024 ஆம் ஆண்டின் வாகன ஓட்ட அட்டவணை பிரகாரம் சபை வளவிற்குள்	வாகனங்கள் வாகனக் கொள்கைப் பிரகாரம் சபை செயலக அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும், WP-CAS-7557 இலக்க வாகனம் NWSDB இன் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்ததென போக்குவரத்துப் பிரிவு எவ்வித பதிவுகளையும் கொண்டிருக்கவில்லை.	சுற்றறிக்கை பிரகாரம் ஒதுக்கப்பட்ட வாகனங்களற்கு செய்யப்பட்ட மேலதீக பயன்பாடு விசாரணையின் பின்னர் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடப்பட வேண்டும்.

	நுழைந்திருக்காததுடன் தலைவருடைய பயன்பாட்டிற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததென ஆவணங்கள் குறிப்பிடப்பட்ட போதிலும் ஏனைய வாகனங்கள் பயன்பாட்டினை ஆய்வு செய்வதற்கு எவ்வித சான்றுகளும் பெறப்படவில்லை.		
(ஊ) பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2015 மே 25 ஆந் திகதிய PED/1/2015 ஆம் இலக்க ஆம் சுற்றறிக்கை			
(i) பந்தி 3.2.1	சுற்றறிக்கைக்கு முரணாகவும் வரிசை அமைச்சு செயலாளரின் அனுமதியை பெற்றுக் கொள்ளாமலும் ஒரு மாதத்திற்கு சபையின் தலைவர் மற்றும் உப தலைவர் 2021 சனவரியிலிருந்து மாதம் ஒன்றிற்கு 145 லீற்றரிற்கு எரிபொருள்களை பயன்படுத்தியிருந்ததுடன் 2022 சனவரியிலிரந்து 2024 ஆகஸ்ட் மாதம் வரை தலைவால் 9,652.92 லீற்றரும் உப தலைவரால் 11,853.25 லீற்றரும் மிகையாக பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும் உப தலவருக்கு ஒதுக்கப்பட்ட வாகனம் பொது முகாமையாளர் மற்றும் ஆளுகைச் சபைக்கு அறிவிக்காமல் 2022 ஆம் அண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டுவரை வெளித்தரப்பினரால் பயன் படுத்தப்பட்டிருந்தது. அந்த காலப்பகுதியின் பொது வாகனம் 13,698 கிலோ மீற்றர ஓடியிருந்தது.	தலைவரின் மேலதிக எரிபொருளிற்கான அனுமதி 01/2024 ஆம் இலக்க அரச வர்த்தக சுற்றறிக்கையின் 11.3 ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் செயலாளரிடமிருந்து பெறப்பட்டிருந்தது. தலைவரின் கடமையின் தன்மையை கொண்டு முன்னனுமதி பெறல் நடைமுறைக்கு சாத்தியமற்றிருந்ததுடன் எதிர்காலத்தில் இதனுடன் இணங்குவதற்கு கவனத்திற் கொள்ளப்படும்.	நட்டங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ii). பந்தி 3.2.2	(i) 2022 சனவரியிலிருந்து 2023 யூலை வரை சபையின் மேலதிக பொது முகாமையாளர் மற்றும் பிரதி பொது முகாமையாளர்களால் ரூபா 7.45 மில்லியன் பெறுமதியான 23,313 லீற்றர் எரிபொருள் மிகையாக பயன்படுத்தியதற்காக வேண்டப்பட்ட சுற்றறிக்கை பிரகாரம் பணிப்பாளர் சபையின் அனுமதி பெற்றிருக்காததுடன் 2025 ஏப்ரல் வரை மிகை பாவணைக்காக ஏற்பட்ட செயவினத்திற்காக மீளளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. (ii) சபையானது பொது திறைசேரயிடமிருந்து விசேட அனுமதி பெறாமல் 1990 ஆம் ஆண்டிலிருந்து எல்லையில்ாமல் ஒரு கிலோ மீற்றருக்கு ரூபா 2 முதல் ரூபா 15 வரை இருந்த வீதங்களில் சலுகையில் தனிப்பட்ட பயன்பாட்டிற்கு அலுவல நேரத்தின் பின்ர் மற்றும் விடுமுறை நாட்களில் மேதிக GM, பிரதி GM மற்றும் உதவி GMs என்பொருக்கு சபை வாகனங்களை பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கியிருந்தது. ஆகவே, சபையானது 2022 சனவரியிலிருந்து 2023 யூலை வரை 13 ஊழியர்களின் தனிப்பட்ட பாவணைக்கு பயனபடுத்திய 12,010 லீற்றர்களிற்காக	இந்த விடயம் 2024.03.21 இல் அமைச்சில் நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்தவ குழுக் கூடட்டத்தில் விவரிக்கப்பட்டதுடன் அமைச்சு செயலாளருக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் பிரகாரம் குழுவானது பொது முயற்சிகள் திணைக்களத்தின் சிரேஸ்ட உத்தியோகத்தர் உள்ளடங்க சபையின் சிரேஸ்ட உத்தியொகத்தர்களை கொண்டுள்ளதுடன் . விவாதிக்கபபட்ட வியஙகள் மற்றும் வழங்கப்பட்ட பரிந்துகைளின்படி சுற்றறிக்கைக்கு அமைய புதிய சுற்றறிகையை வழங்குவதற்கு படிமுறைகளை எடுத்திருந்தது.	நட்டங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

